1989 மார்ச் 30] [திரு. கோ. வீரையன்]

கொண்டிருப்பதில் பயனில்லை என்பதைத்தான் நான் சொல்கி கிறேனே தவிர, ஏழைகளுக்கு வீடுகள் வேண்டாம் என்று நான் கூறவில்லை. அனைவருக்கும் அரசு இலவசமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை, என்னுடைய கொள்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திட்டம் தொடரும்; பேரவை இத்துடன் முடியும். வணக்கம்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (31–3–1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-08 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

11. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

24. 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 6–11–1987-ஆம் நாளிட்ட 1672-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) 61 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

25. 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை ஒருவகை செய்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 12–11–1987-ஆம் நாளிட்ட 1713-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயம் செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

26. உள்துறையின் 12–4–1985-ஆம் நாளிட்ட II (2/HO/2334/85-ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 14–12–1988-ஆம் நாளிட்ட 2677-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1989 மார்ச் 30

27. 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 14-12-1988-ஆம் நாளிட்ட 2678-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

28. தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் 1985-86-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-இம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

29. அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் 1986-87-ம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ.—அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்,

எதுவுமில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS